<u>மன்னார்குடி நகராட்சி</u>

# சாதாரணக்கூட்டம்

**நிகழும் விளம்பி வருடம் ஐப்பசி மாதம் – 14ம் தேதி (2019 ம் வருடம் அக்டோபர் –31 ந் தேதி) வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலக வளாகத்தில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அது சமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்.1 | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் செப்டம்பர் – 2019 மாதத்திற்கான நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மான எண். 937 பதிவு செய்யப்பட்டது. |
| பொருள் எண்.2 | நகராட்சி நகர்நல அலுவலர் அவர்களின் செப்டம்பர் – 2019 மாதத்திற்கான நாட்குறிப்புகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது | தீர்மான எண். 938 பதிவு செய்யப்பட்டது. |
| பொருள் எண்.3 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு நோய் தடுப்பு பணிகள் 2019க்கு வீடு வீடாக டெங்கு நோய் கண்டறியும் பணி மற்றும் கணக்கெடுப்பு பணிகளுக்கு கீழ்வரும் விவரப்படி விழிப்புணர்வு பிரசுரம் மற்றும் வருடாந்திர காலண்டர் அச்சடித்து பயன்படுத்திட வேண்டியுள்ளது. தற்போது அலுவலகத்தில் போதிய அளவு இருப்பு இல்லாததால், கூடுதலாக தனியார் அச்சகத்திலிருந்து அச்சடித்து பயன்படுத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/– க்குள் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1.விழிப்புணர்வு பிரசுரம் – 150000 எண்கள்<br><br>2.கொசு புழு ஒழிப்பு பணி வருடாந்திர காலண்டர் – 15000 எண்கள்<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.5155/2019/எச்1) | தீர்மான எண்.939 அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.4 | இந்நகராட்சியின் இரண்டாண்டு சாதனைகளை தினமலர், தினத்தந்தி மற்றும் தினகரன் சிறப்பு மலரில் விளம்பரம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில் கீழ்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்ய அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்கான பட்டியல் தொகை கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது. | தீர்மான எண். 940 அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது |

| வ. எண். | விபரம் | பட்டியல் எண் / நாள். | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | தினமலர் | TRY 9078 / 07.10.2019 | 27,300 |
| 2. | தினத்தந்தி | | 33,390 |
| 3. | தினகரன் | 3300187624 / 07.10.2019 | 36,750 |
| 4. | மாலைமலர் | TNJ/D19080107 / 31.08.2019 | 26,000 |
| | | கூடுதல் | 1,23,440 |

மேற்கண்ட கட்டண தொகை ரூ.1,23,440/—ஐ செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு: மேற்காணும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள .
மன்றம் அனுமதி வழஙகலாம்.

<table>
<tr>
<td>பொருள் எண்.5</td>
<td>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் பல்வேறு திட்ட பணிகள், குடிநீர் விநியோக பிரிவில் புதிய குழாய் இணைப்பு, பழுது பார்த்தல் பணிகள் மற்றும் சீரான குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கு குடிநீர் பணி மேற்பார்வையாளர் பணி காலியாக உள்ளதால், மதிப்பீடு மற்றும் மேற்பார்வை பணிகள் மேற்கொள்ள சிரமமாக உள்ளது.<br><br>எனவே பொறியியல் பிரிவில் பல்வேறு பணிகள் மேற்கொள்ள, தொழில்நுட்ப உதவியாளரை தற்காலிகமாக பணியமர்த்தி கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.804 நாள்.31.05.2019ல் ஆறு மாத காலத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தக்காலம் 31.10.2019 உடன் முடிவடைவதால், மேற்கண்ட பணியை 01.11.2019 முதல் 30.04.2020 வரையிலான ஆறு மாத காலத்திற்கு, ஏற்கனவே வழஙகப்பட்டு வரும் விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.95,000/– ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மேற்படி செலவினத்தை குடிநீர்நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 941<br>அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.6</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 டெப்போ ரோடு உரக்கிடஙகில் பயன்படுத்தப்படும் இயந்திரஙகளுக்கு தேவையான மின்சாரத்தை கொண்டுசெல்ல 3 ½ core 50 sqm cable சுமார் 400 மீட்டர் நீளத்திற்கு அமைக்கும் பணிக்கு 18.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு எஸ். முத்துகுமரன்,<br>ஒப்பந்ததாரர், மன்னார்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.37 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு என். மாரிமுத்து<br>ஒப்பந்ததாரர்,மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 1.04 % அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழஙகலாம்.</td>
<td>தீர்மான எண். 942<br>அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது.<br>.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்.7</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு 18.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>M/s RGK Infrastructure,<br>ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.22 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s ஆர்த்தி & கோ<br>ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.52 % அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழஙகலாம்.</td>
<td>தீர்மான எண்.943<br>அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.8</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட 11 மேல்நிலை குடிநீர் தேக்க தொட்டிகளிலிருந்து 33 வார்டுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழஙக ஒரு வருடத்திற்கு தேவையான Sodium Hypo Chlorite வாஙகும் பணிக்கு 18.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>M/s பகவதி ஏஜென்ஸிஸ்,<br>ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.69 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s காவியா எண்டர்பிரைசஸ்,<br>ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 1.04 % அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: 1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி</td>
<td>தீர்மான எண்.944<br>அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>வழங்கலாம்.<br><br>2. தற்போது நகரில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால், அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.9</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட ஒத்தைதெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு புதிதாக குளோரினேஷன் மோட்டார் வாங்கி பொருத்தும் பணிக்கு 18.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>M/s பகவதி ஏஜென்ஸிஸ்,<br>ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.76 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s காவியா எண்டர்பிரைசஸ்,<br>ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட 1.60 % அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: 1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான சதவிகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2. தற்போது நகரில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால், அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.945<br>அலுவலக குறிப்பு<br>அனுமதக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.10</td>
<td>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு நோய் தடுப்பு பணிகள் 2019ம் ஆண்டிற்கு மேற்கொள்ள தேவைப்படும் டெங்கு நோய் தொற்று கண்டறிந்து கணக்கெடுக்கும் பணிக்கு தேவையான படிவங்கள் மற்றும் காலண்டர்கள் போதிய இருப்பு இல்லாததால், தேவைக்கேற்ப கூடுதலாக அச்சடித்து பயன்படுத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ–3,50,000/–ற்குள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.10.2019 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.</td>
<td>தீர்மான எண். 946<br>அலுவலக குறிப்பு<br>அனுமதக்கப்பட்டது.</td>
</tr>
</table>

மேற்படி பணிகள் தொடர்பாக 15.10.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனம் பெயர் | பணி விவரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1. | தூத்துக்குடி மாவட்ட தொழில் கூட்டுறவு சங்கம் | 1. விழிப்புணர்வு அறிவிப்பு (மல்டி கலர்)<br>2. மாதாந்திர கணக்கெடுப்பு படிவம் | ரூ.72,240/–<br>ரூ.2,73,580/– |
| 2. | திருநெல்வேலி மாவட்ட தொழில் கூட்டுறவு சங்கம் | 1. விழிப்புணர்வு அறிவிப்பு (மல்டி கலர்)<br>2. மாதாந்திர கணக்கெடுப்பு படிவம் | ரூ.67,200/–<br>ரூ.2,65,500/– |
| 3. | கோவில்பட்டி சிறுதொழில் கூட்டுறவு சங்கம் | 1. விழிப்புணர்வு அறிவிப்பு (மல்டி கலர்)<br>2. மாதாந்திர கணக்கெடுப்பு படிவம் | ரூ.75,600/–<br>ரூ.2,76,120/– |

.

அலுவலக குறிப்பு:

1. மேலே வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.2ல் கண்டுள்ள திருநெல்வேலி மாவட்ட மல்டி கூட்டுறவு சங்கம் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளி மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று, மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழஙகியதினையும், செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

(ந.க.எண்.5155/2019/எச்1)

பொருள் எண்.11

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் ஆர்.பி.சிவம் நகர் கலவை உரக்கிடங்கில் உள்ள புதிய நுண்ணுயிர் கலவை உர மையத்தில் கலவை உரம் தயாரிக்க குப்பைகளை தரம் பிரிக்கும் பணிக்கு வெளிக்கொணர்வு மூலம் (Outsourcing) ஒப்பந்த முறையில் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.827 நாள்.31.05.2019ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு 15.10.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1. | பகவதி ஏஜென்சிஸ்,150,ஒலிம்பிக்தெரு,அசேஷம், மன்னார்குடி. | 6,19,484.55/– | 0.18% குறைவு |
| 2. | காவியா எண்டர்பிரைசஸ்,198, நடராஜன் மேலத்தெரு, காளவாக்கரை, மன்னார்குடி | 6,27,254.08/– | 1.08% அதிகம் |

அலுவலக குறிப்பு: மேலே வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்ட பகவதி ஏஜென்சீஸ், மன்னார்குடி நிறுவனம் 0.18% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.2245/2019/எச்1)

தீர்மான எண்.947
அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது.
.

<table>
<tr>
<td>பொருள் எண்.12</td>
<td>இந்நகராட்சியில் FSTP, MCC, Bio-mining மற்றும் TURIP ஆகிய திட்டப்பணிகளுக்கு லெவல் எடுத்து கணக்கீடு செய்வதற்கு Dumpty Level மற்றும் சாலை அமைக்க பயன்படுத்தப்படும் Roller Boy ஆகிய உபகரணங்கள் பொறியியல் பிரிவிற்கு வாங்கும் பணிக்கு ரூ.30,000/—ம் மன்ற தீர்மான எண்.851 நாள்.28.06.2019ல் மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி 22.10.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>வரப்பெற்றுள்ள விலைப்புள்ளி</th><th>விலைப்புள்ளி ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>M/s RSP & CO.,6/347, 6th Block,Mogappair West Chennai.</td><td>ரூ.30,090/—</td></tr>
<tr><td>2.</td><td>M/s Geo Info Media,25, Govindan Street,Kulathur, Chennai.</td><td>ரூ.33,630/—</td></tr>
<tr><td>3.</td><td>M/s alStrut India Pvt. Ltd,53, Thattankulam Road,Madavaram, Chennai.</td><td>ரூ.41,300/—</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>
1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ. எண்.1ல் கண்ட M/s RSP & CO, Chennai என்ற நிறுவனத்தின் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. மேலும் உத்தேச செலவினத்தை விட கூடுதல் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
(ந.க.எண்.2075/2019/அ4</td>
<td>தீர்மான எண். 948 அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.13</td>
<td>மன்னார்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி மற்றும் தனியார்களுக்குப் பாத்தியப்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிலத்தில் வைக்கப்படும் விளம்பரப் பலகை மற்றும் விளம்பர பலகை அல்லாத விளம்பரங்கள் தட்டிகள், பேனர்கள் மற்றும் சுவர் விளம்பரங்கள் போன்றவற்றிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (தேர்தல்) துறை அரசாணை எண்.47 நாள்.26.06.2003 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.184 பாகம்—III பிரிவு எண்.1(எ) நாள்.26.06.2003ல் விளம்பர பலகைகள் அனுமதி விளம்பரவ ரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003ல் திருத்தஙகள் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (MC-1) துறை அரசாணை எண்.17 நாள்.31.01.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் பாகம்—III பிரிவு எண்.1(a) தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் விளம்பர பலகைகள் உரிமம் வழஙகுதல் வசூல் செய்தல் விதிகள் 2003 என திருத்தம் செய்யப்பட்டு நகரில் உள்ள ARTERIAL ROADS மற்றும்</td>
<td>தீர்மான எண்949</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | பிரதான சாலைகள், தெருக்கள் மற்றும் இதரப் பகுதிகளில் அமையும் விளம்பரத்திற்கு தக்கவாறும், இடத்திற்கு தக்கவாறும் மற்றும் விளம்பர பலகை அமையும் சாலையின் அகலத்திற்கு தக்கவாறும் வைக்கப்படும் விளம்பர பலகைகள் உரிமம் கட்டணம், விண்ணப்ப கட்டணம் திருத்தப்பட்ட விதிகளின்படி மற்றும் வாடகை வசூல் செய்தல் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது. |

**மன்னார்குடி நகராட்சி பகுதிகள்**

அ) விதி 6ல் துணை விதி (i)ன்படி விளம்பரப் பலகைகள் நிறுவுதல் அதிகபட்ச அளவுகளுக்கான அட்டவணை கீழ்கண்டவாறு:–

| வ. எண். | சாலை அகலம் / சாலை பாதைகள் | அதிகபட்ச அளவு | சாலைகள் சந்திப்பிலிருந்து நிறுவுதல் தூரம் |
|---|---|---|---|
| 1 | எந்த ஒரு சாலையில் உள்ள கடைகள் | 3 அடி X கடைகளின் அகலம் | பொருந்தாது (Not Applicable) |
| 2 | 50 அடி / 4 பாதைகள் (Lanes) | 20 அடி X 10 அடி | |
| 3 | 80 அடி / 6 பாதைகள் (Lanes) | 30 அடி X 15 அடி | 100 மீட்டர் |
| 4 | 120 அடி / அதற்கு மேலும் | 40 அடி X 20 அடி | |

ஆ) விளம்பர பலகை உரிமம் வழஙக மறுக்கப்படும் பட்சத்தில் அரசிற்கு மேல் முறையீடு செய்ய மற்றும் உரிமம் புதுப்பிக்க விதி எண்.11ன்படி கட்டணம் ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்)

இ) புதிதாக சேர்க்கப்பட்டுள்ள விதி எண்.12 துணை விதி (i)ன்படி உரிமம் வழஙக மற்றும் புதுப்பிக்க விண்ணப்ப படிவம் கட்டணம் ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்)

ஈ) விதி எண்.4ல் உரிமம் வழஙகும் கால அளவினை 31வது நாள் மார்ச் மூன்றாவது வருடம் என்பதை 3 வருடஙகள் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

உ) விதி எண்.13ன்படி விளம்பர பலகைகள் நிறுவுதல் உரிமக்கட்டணம்

1. பேருந்துகள் செல்லும் முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைகள் மெயின்ரோடு, (பை–பாஸ் ரோடு, மேல வீதி)

நகராட்சி மற்றும் மத்திய மாநில அரசிற்குச் சொந்தமான சாலைகளில் விளம்பர பலகைகள் நிறுவ உரிமக் கட்டணம் சதுரமீட்டர் ஒன்றிற்கு ரூ.6000/– (ரூபாய் ஆறாயிரம் மட்டும்)

2. நகரில் உள்ள இதர சாலைகள் மற்றும் தெருக்களில் விளம்பர பலகைகள் நிறுவ உரிமக்கட்டணம் சதுர மீட்டர் ஒன்றிற்கு ரூ.6000/– (ரூபாய் ஆறாயிரம் மட்டும்)

மன்னார்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையஙகள், பூஙகாக்கள், சந்தைகள் வணிக வளாகஙகள், இதர கட்டிடஙகள் மற்றும் நகராட்சி நிலஙகள் ஆகிய பகுதிகளில் நிறுவப்படும் விளம்பர பலகை அமையும் பரப்பளவிற்கு ஏற்றவாறு ஒரு சதுர மீட்டருக்கு ஒரு வருடத்திற்கு நில வாடகை நிர்ணயம் செய்ய மேற்கண்ட விதிகள் 2003 பிரிவு 7(2)ன்கீழ் நகர்மன்றத்திற்கு அதிகாரம் வழஙகப்பட்டுள்ளதன் அடிப்படையில், ஒரு சதுர மீட்டருக்கு, ஒரு ஆண்டிற்கு கட்டணம் குறைந்தபட்சம் ரூ.4,000/– அதிகபட்சம் ரூ.6,000/– என நிர்ணயம் செய்யலாம்.

மேற்கண்டுள்ள அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரஙகள் / விளம்பர பலகைகள் அமைத்தல் (முறைப்படுத்துதல்) நிறுவ இடஙகள் தேர்வு செய்தல் மற்றும் நடைமுறைகள் தொடர்பான கொள்கை முடிவுகளை (outdoor Advertising Policy) செயல் படுத்துவதற்கு கீழ்க்கண்டுள்ளவாறு விளம்பரஙகள் முறைப்படுத்துதல் குழு (Advertisement Regulatory Committee) அமைத்திடவும்,

| வ.எண் | விளம்பரஙகள் முறைப்படுத்துதல் குழு உறுப்பினர்கள் |
|---|---|
| 1 | நகராட்சி ஆணையர் |
| 2 | நகராட்சி பொறியாளர் |
| 3 | காவல் ஆய்வாளர் (போக்குவரத்து) |
| 4 | காவல் ஆய்வாளர் (சட்டம் (ம) ஒழுஙகு) |
| 5 | நகரமைப்பு ஆய்வாளர் |

மேலும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் மற்றும் துணை விதிகள் ஏற்படுத்தி

<table>
<tr>
<td></td>
<td>நடைமுறைப்படுத்துவதற்கும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அரசாணை எண்.17 நாள்.31.01.2019ல் வழஙகப்பட்டு உள்ள அறிவுரைகளின்படி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் விளம்பர பலகைகள் உரிமம் வழஙகுதல் கட்டணம் விண்ணப்பக் கட்டணம், புதுப்பித்தல் கட்டணம் மற்றும் வருடாந்திர வாடகை வசூல் செய்தல் சம்பந்தமாக திருத்தப்பட்ட விதிகளின்படி மேற்காண் பொருளில் கண்டவாறு மன்னார்குடி நகராட்சி பகுதியில் வைக்கப்படும் விளம்பர பலகைகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட திருத்திய கட்டணஙகளை 01.12.2019 முதல் வசூல் செய்வதற்கும், அதற்கான செலவின தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.14</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட இ.பி. நகர் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் இயஙகிவரும் ஜெனரேட்டரின் உதிரிபாகஙகளை மாற்றி ஆயில் சர்வீஸ் செய்து பராமரிப்பு செய்யும் பணிக்கு 09.10.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு,<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>Shri Annamalai Power Generator,29, New Saram, Pudhucherry</td><td>ரூ.20,275/–</td></tr>
<tr><td>2.</td><td>Sun Power Enterprises,14, Mela Oduthurai, Karaikal</td><td>ரூ.21,845/–</td></tr>
<tr><td>3.</td><td>Ananda Sakthi Power Tech,128, Thiruvalluvar Sali, Pandicherry</td><td>ரூ.22,785/–</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு: மேலே வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள Shri Annamalai Power Generator, Pudhucherry என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><br>(ந.க.எண்.4341/2019/ எச்1)</td>
<td>தீர்மான எண்.950<br>அலுவலக குறிப்பு<br>அனுமதக்கப்பட்டது,</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்.15</td>
<td>
இந்நகராட்சிக்குட்பட்ட பூக்கொல்லை தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் இயங்கிவரும் ஜெனரேட்டரின் உதிரிபாகங்களை மாற்றி ஆயில் சர்வீஸ் செய்து பராமரிப்பு செய்யும் பணிக்கு 09.10.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு,
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>Shri Annamalai Power Generator,29, New Saram, Pudhucherry</td><td>ரூ.24,575</td></tr>
<tr><td>2.</td><td>Sun Power Enterprises,14, Mela Oduthurai, Karaikal</td><td>ரூ.27,945</td></tr>
<tr><td>3.</td><td>Ananda Sakthi Power Tech,128, Thiruvalluvar Sali, Pandicherry</td><td>ரூ.29,675</td></tr>
</table>
அலுவலக குறிப்பு: மேலே வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள Shri Annamalai Power Generator, Pudhucherry என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
(ந.க.எண்.5100/2019/ எச்1)
</td>
<td>தீர்மான எண்.951<br>அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td>பொருள் எண்.16</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட புதைச்சாக்கடை பணிமனையில் இயங்கிவரும் ஜெனரேட்டரின் உதிரிபாகங்களை மாற்றி ஆயில் சர்வீஸ் செய்து பராமரிப்பு செய்யும் பணிக்கு 09.10.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு,<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>Shri Annamalai Power Generator,29, New Saram, Pudhucherry</td><td>ரூ.45,350/</td></tr>
<tr><td>2.</td><td>Sun Power Enterprises,14, Mela Oduthurai, Karaikal</td><td>ரூ.54,296/</td></tr>
<tr><td>3.</td><td>Ananda Sakthi Power Tech,128, Thiruvalluvar Sali, Pandicherry</td><td>ரூ.57,266/</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு: மேலே வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள Shri Annamalai Power Generator, Pudhucherry என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.5098/2019/ எச்1)</td><td>தீர்மான எண்.952<br>அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்.17</td><td>இந்நகராட்சி அலுவலகத்தில் இயங்கிவரும் ஜெனரேட்டரின் உதிரிபாகங்களை மாற்றி ஆயில் சர்வீஸ் செய்து பராமரிப்பு செய்யும் பணிக்கு 09.10.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு,<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>Shri Annamalai Power Generator,29, New Saram, Pudhucherry</td><td>ரூ.15,970/–</td></tr>
<tr><td>2.</td><td>Sun Power Enterprises,14, Mela Oduthurai, Karaikal</td><td>ரூ.16,980/–</td></tr>
<tr><td>3.</td><td>Ananda Sakthi Power Tech,128, Thiruvalluvar Sali, Pandicherry</td><td>ரூ.16,940/–</td></tr>
</table>
<br>.<br>அலுவலக குறிப்பு: மேலே வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள Shri Annamalai Power Generator, Pudhucherry என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.4341/2019/எச்1)</td><td>தீர்மான எண்.953<br>அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்.18 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகர் பகுதிகளில் வார்டுகளில் உள்ள தெருக்களில் வீடுவீடாக குப்பைகள் சேகரித்தல், இனம் பிரித்தல், சேகரிக்கப்படும் குப்பைகளை உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லுதல் மற்றும் கழிவு நீர் கால்வாய்களை பராமரித்தல் உள்ளிட்ட அனைத்து விதமான பணிகளையும் செய்திட தேவையான துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 97 நபர்கள் மற்றும் ஓட்டுநர்கள் வழங்கிட ஸ்ரீமாதா சோசியல் டெவலப்மெண்ட் பவுண்டேசன், மன்னார்குடி என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்திற்கு 30.04.2019 முடிய ஒப்பந்தகாலம் நீட்டிப்பு உரிமம் முடிவடைவதாலும், அதன்பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தனியார் நிறுவனம் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள மூன்று ஆண்டுகளுக்கு கொள்கை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.<br>மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கடந்த 17.10.2018 அன்று கோரப்பட்டு நிர்வாக காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே மறு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு போதிய கால அவகாசம் தேவைபடுவதாலும் தற்பொழுது பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் இருப்பதால் ஒப்பந்த பணி நடவடிக்கை மேற்கொள்ள இயலாமல் துப்புரவு பணி பாதிக்கும் நிலை ஏற்படுகிறது. இந்நிலையில் இப்பணியினை தொடர்ந்து செய்து வரும் ஸ்ரீ மாதா சோசியல் டெவலப்மெண்ட் பவுண்டேசன் நிறுவனம் மறுஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை முடியும் வரை மூன்று மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருவாரூர் அவர்களின் 2018–19ம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட தினக்கூலி பட்டியலில் குறிப்பிட்டுள்ள தினக்கூலி விகிதத்தில் மூன்று மாத காலத்திற்கு உரிமம் நீட்டிப்பு செய்து தர கோரி 14.10.2019 அன்று விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளது.<br>மேலும் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சங்கதின் வாயிலாக (ஊஜகூரு) திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களினால் 2018–2019ம் ஆண்டில் உயர்த்தப்பட்ட தினக்கூலி அடிப்படையில் கூலி வழஙகிட கோரி பல்வேறு தேதியிட்ட விண்ணப்பஙகள் மற்றும் போராட்டஙகள் வாயிலாக நகராட்சி மற்றும் மாவட்ட ஆட்சியர் திருவாரூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.<br>எனவே பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதியும், எதிர்வரும் திருவிழா மற்றும் பண்டிகை காலஙகளில் மேற்கொள்ளபடவேண்டிய துப்புரவு பணியின் முக்கியத்துவம் கருதி மேலும் 01.11.2019 முதல் 31.01.2020 முடிய மூன்று மாதகாலத்திற்கு ஸ்ரீ மாதா சோசியல் டெவலப்மெண்ட் பவுண்டேசன் நிறுவனத்திற்கு திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயக்கப்பட்ட புதிய தினக்கூலி அடிப்படையில் உரிமமம் நீட்டிப்பு செய்து வழஙகலாம். அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது | தீர்மான எண். 954<br>அலுவலக குறிப்பு அனுமதக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு: அ) பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் 01.11.2019 முதல் 31.01.2020 வரை மூன்று மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருவாரூர் அவர்களினால் 2018–2019ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக ஸ்ரீ மாதா சோசியல் டெவலப்மெண்ட் பவுண்டேசன் நிறுவனத்திற்கு உரிமம் நீட்டிப்பு செய்து உத்திரவிடலாம்.<br><br>ஆ) பொதுசுகாதாரப் பணியில் அவசர அவசியம் கருதி மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தப்பணி மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு ஆகும் கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.258/2015/எச்1) | |

**ஒம்) திரு கோ. இளங்கோவன், டி.சி.இ.,**
**தனி அலுவலர்**
**மன்னார்குடி நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையர் (பொ)**
**மன்னார்குடி நகராட்சி**